# அம்பை சிறுகதைகளில் பயணப் பதிவுகள்

# Travel Documentation in the Short Stories of Ambai

**வெ. சந்தியா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் - 632115.

**V. Sandhiya,** Ph.d Research Scholar, Tamil Department, Thiruvalluvar University, Velur – 632115.

ORCID ID: https://orcid.org/0009-0003-3867-3315

**DOI : 10.5281/zenodo. 10544685**

## Abstract

Every human being keeps moving from one place to the other during his lifetime which is known as travel. Travelling is not only a pleasant and an interesting experience, but it also exposes one to the lifestyle, habitation, food habits, climatic conditions, rituals and festivals of places being visited. Tourism, journey, travel, pilgrimage, excursion, voyage, and wayside expenses are some of the terminologies related to travel. Travelling is also an art without which human beings may not have attempted to step on the moon. The short stories of Ambai records such achievements in plenty.

## ஆய்வுச் சுருக்கம்

இன்றைய அறிவியல், விஞ்ஞானம், தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு மத்தியிலும் இக்கால இலக்கிய வகைகளில் ஒன்றான சிறுகதை இலக்கியம் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளது. இன்றைய பெண்ணியவாதப் படைப்பாளிகளுள் தனித்து நிற்பவர் அம்பை. தன் எழுத்துக்களின் மூலம் பெண்களின் முன்னேற்றத்திற்கான சிந்தனைகளைச் சமூகத்தில் விதைத்து வருகிறார். பல்வேறு கோணங்களில் எழுதப்பட்டுள்ள இவருடைய சிறுகதைகளில் உள்ள பயணப்பதிவுகளை அடிக்கோடிட்டுக் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**Keywords:** பயணம், பயணப்பதிவுகள், அம்பை சிறுகதைகள், பெண்ணியம், Payanam, Payanpapthivugal, Ambai sirukathaigal, Feminism

**முன்னுரை**

ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்தது முதல் இறக்கும் வரையிலும் ஏதோ ஒன்றை நோக்கி பயணித்துக் கொண்டு தான் இருக்கிறான். பயணம் என்பது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லுதல் ஆகும். பயணங்கள் மனித குலத்திற்கு மகிழ்ச்சியையும், சுவாரசியத்தையும் அளிப்பது மட்டுமல்லாமல் பிற பகுதி மக்களின் பழக்கவழக்கங்கள், நாகரிகம், உணவுமுறை, வாழ்க்கை நிலை, தட்பவெப்பம், சடங்குகள், விழாக்கள் போன்றவற்றை அறிந்து கொள்ள வழிவகை செய்கின்றன.

சுற்றுலா, சுற்றுச் செலவு, பிரயாணம், யாத்திரை, வழிச்செலவு, வழிப்பயணம் என்பது பயணத்தைக் குறிக்கும் வேறு சொற்கள் ஆகும். பயணம் என்பதற்கு மதுரைத் தமிழ்ப் பேரகராதி புறப்பாடு, வெளியீடு, பிரயாணம் என்று விளக்கம் தருகிறது. க்ரியாவின் தமிழ் அகராதி இருக்கும் ஊர், நகரம் முதலியவற்றிலிருந்து மற்றொன்றிற்குச் செல்லும் பயணம் என்று விளக்கம் தருகிறது. தமிழ் லெக்ஸிகன் பயணம் என்பதற்குப் பிரயாணம் என்று பொருள் தருகிறது. தாம் சென்று கண்ட இடங்களையும் அங்கு தமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் சிறந்த முறையில் ஒருவர் விளக்கி விரித்துரைப்பதே பயணஇலக்கியம் ஆகும் என்று ஆக்ஸ் போர்டு பேரகராதி விளக்கம் தருகிறது. இத்தகைய பயணங்கள் அம்பையின் சிறுகதைகளில் எவ்வாறு பதியப் பெற்றுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தமிழ் இலக்கியங்களில் பயணம்**

தொல்காப்பியத்தில் “வரைவிடை வைத்து பொருள் வயிற் பிரிதல்” என்று பாலைத்திணையில் தொல்காப்பியர் கூறியிருப்பது, பயண இலக்கியத்திற்குக் கால்கோளிட்ட முதல்வர் அவரே என்பது உறுதியாகின்றது. யாதும் ஊரே யாவருங் கேளிர், திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்று சங்ககாலம் தொட்டே பயணத்தைப் பற்றி தமிழர்கள் எழுதியிருக்கின்றனர். தமிழின் முதற் காப்பியமான சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகியின் மதுரை வழிப் பயணம் பல காதைகளில் விரிகிறது. இதே போன்று சீவக சிந்தாமணியில் சீவகனின் வழிப்பயணம் பன்னிரு மாதம் தொடர்கிறது. பெருங்கதையில் உதயணன் வாசவதத்தையைப் பிரித்து மகதம் சென்ற வழிப் பயணம் குறிப்பிடத்தக்கது. அரிச்சந்திர புராணத்தில் மூன்று வழிப்பயணக் காட்சிகள் அமைகின்றன. (பயண நூல்கள் வழிப் பண்பாடு, பக்.107,108) இத்தகைய பயணத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழில்

பயண இலக்கியம் என்னும் புதிய இலக்கிய வகைக்கு முன்னோடியாக அமைந்தவர் "உலகம் சுற்றும் தமிழன்" என்று அழைக்கப்படும் ஏ.கே.செட்டியார் ஆவார்.

**பேருந்துப் பயணம் - உள்ளூர்ப் பயணம்**

பயணம் என்றாலே அது ஓர் இனிமையான அனுபவம். அதுவும் பேருந்துப் பயணம் என்றால் ஜன்னல் ஒரே இருக்கையில் அமர்ந்து வேடிக்கைப் பார்த்து கொண்டே பயணம் செய்வதென்பது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பக்கூடிய ஒன்றாகும். அவ்வாறாக பேருந்தின் ஜன்னல் ஒரே இருக்கையில் அமர்ந்து ஒரு பெண் பயணம் செய்யும் போது அவள் சந்திக்கும் பிரச்சனைகளையெல்லாம் '**பயணம்** - 1' என்ற சிறுகதையில் ஆசிரியர் அம்பை பதிவு செய்துள்ளார். திருச்சி செல்வதற்காக பேருந்தில் பயணம் செய்த அந்தப் பெண்ணின் பக்கத்தில் தாயின் மடியில் அமர்ந்திருந்த குழந்தை சிறுநீர் கழித்து அவளது சேலையை ஈரம் செய்தது. குழந்தையின் தாய் அவளது தோள்பட்டையின் மீது கண் அயர்ந்து உறங்கி வாய் எச்சிலால் அவள் ரவிக்கையை ஈரமாக்கியது. முன்னால் இருந்த இருக்கையிலிருந்து காற்றில் வந்த புகையிலைச் சாற்றுத் துப்பல் அவள் மீது தெளித்தது, என இவையெல்லாம் அவளது பயணத்தைக் கசப்பாக்கிவிட்டதைக் கதையில் அறியமுடிகிறது. பெண் என்பதினாலேயே அவள் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ள வேண்டும் என அறிவுரை கூறுவது போல பேருந்தில் பயணம் செய்யும் பிற கதாப்பாத்திரங்கள் இடம் பெறுகின்றனர். அந்தப் பெண் ஊருக்குத் திரும்பும் போது பேருந்தில் ஏறி ஒற்றை இருக்கையில் அமர்ந்ததிலிருந்து அந்தப் பயணம் அவளுக்கு ஏற்படுத்திய வலிகளையும் வேதனைகளையும் நம் முன் வைக்கிறது. பேருந்தில் ஏறிய ஒரு சிறுவனுக்குத் தனது ஒற்றை இருக்கையிலும் நகர்ந்து இடம் கொடுத்து பறவைகள், சூரிய அஸ்தமனம் பற்றி அவனிடம் உரையாடிக் கொண்டு வந்தது, அவளுக்கு இந்தப் பயணம் இனிமையாக அமைந்துள்ளதையும் கதை வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாறாக ஓர் உணர்வுப்பூர்வமான இன்றைய சமூகத்தில் நாம் காணக்கூடிய சம்பவங்களை ஆசிரியர் கதையில் பதிவு செய்துள்ளார் (**அம்பை, காட்டில் ஒரு மான், பக்**.11-19).

**வெளியூர் பயணம்**

ஒரு பெண் தன் பணி நிமித்தமாகப் பல்வேறு ஊர்களுக்குப் பயணம் செய்யும் போதெல்லாம் அவளுக்கு உறுதுணையாகவும் பாதுகாப்பாகவும் ஒரு ஆண் இருக்க முடியும் என்பதைப் '**பயணம்** - 2' என்ற கதை பதிவு செய்துள்ளது. விடிவதற்கு முன்பே திருவனந்தபுரத்திற்குச் செல்வதற்காக பேருந்து நிலையத்திற்கு அவளும், தினகரனும் சென்றுவிட்டனர். இது போன்ற பல பயணங்களில் அவளுக்கு தினகரன் துணையாக

சென்றிருப்பதைக் கதையில் அறிய முடிகிறது. இவ்வளவு பழகியும் தினகரன் என்ற தனி மனிதன் யார் என்று தெரியவில்லை. பேருந்துப் பயணங்களும், நீண்ட நடைகளும், பட்டுக்கோட்டையார் பாட்டுகளும் மட்டுமே பிரதானமாகத் தெரிந்தன. திருவனந்தபுரத்தில் அவளது வேலை முடிந்தவுடன் தினகரனின் தூரத்து உறவான லிஸ்ஸியின் வீட்டுக்கு அவளை அழைத்துச் செல்வதும், லிஸ்ஸியின் அன்பான வரவேற்பும், உபசரிப்பும் அவளுக்கு அந்தப் பயணத்தை இனிமையாக்கியுள்ளது. மேலும் வெளிமாநிலங்களுக்குப் பயணம் செய்யும்போது அங்கிருக்கும் உணவுப் பழக்கவழக்கங்களை நம் மக்கள் ஏற்றுக்கொள்ளாமல் அங்கேயும் நம் உணவு வகைகளைத் தேடிச் செல்வதை, தினகரனின் டெல்லி பயணத்தின் மூலம் அறிய முடிகிறது. (**அம்பை, காட்டில் ஒரு மான்**, **பக்**.20 - 26)

**ஆன்மீகப் பயணம்**

'**பயணம் - 3**' என்ற சிறுகதையில் வெயில் காலம் ஆரம்பானமானதும் மாரியம்மனுக்குப் பொங்கல் படையல் போடுவது பற்றி அம்மா யோசிக்க ஆரம்பித்து விடுவாள். மெஜஸ்டிக்கில் உள்ள மாரியம்மனுக்கு பொங்கல் வைக்கும் செய்தியை அம்மா கூறியவுடன் மைதிலிக்கு உற்சாகம் பிறந்துவிடும். காரணம் அது ஒரு வருடாந்திரக் குட்டிப் பயணம். பள்ளி விடுப்புத் தொடங்கியதும் அமைந்து விடும் பயணம். அவர்கள் வீட்டில் வேலை செய்யும் மருதாயியும், அவள் மகள் மீனாட்சியும், மைதிலியும் மேற்கொள்ளும் சுற்றுலா, அம்மாவிடம் இருந்து ஜட்கா வண்டிக்கான சம்மதத்தைப் பெற்றுக் கொண்டாலும் மெஜஸ்டிக் போக அதிக பேருந்துகள் இருப்பதால் மருதாயி பேருந்திலேயே அவர்களை அழைத்து செல்வாள். பேருந்தில் போகும் போது மைதிலி சன்னல் பக்கத்திலும், வரும்போது மீனாட்சிக்குச் சன்னல் என்று அவர்கள் உடன்பாடு செய்து கொள்வது கதையில் எதார்த்தமாக வெளிப்பட்டுள்ளது. மாரியம்மனைப் பார்த்துவிட்டுப் படையல் முடித்த பிறகு ஜட்காவில் வராமல் பேருந்தில் வந்து மீதமாக்கிய பணத்தில் காரக்கடலை, இலந்தைப் பழம், புளிப்பழம், கிளிமூக்கு மாங்காய், கடலை உருண்டை என அவர்கள் வாங்கி சாப்பிடுவது ஆன்மீகப் பயணத்தின் ஓர் அங்கமாகவே வெளிப்பட்டுள்ளது. ஒருமுறை மைதிலியின் தம்பியையும் மாரியம்மன் கோவிலுக்கு அழைத்து சென்ற போது அவர்கள் சென்ட்ரல் டாக்கீசில் சினிமா பார்த்ததை அம்மாவிடம் அவன் சொல்ல, அவர்களின் வருடாந்திர மாரியம்மன் கோவில் பயணம் தடைப்பட்டுவிட்டது. (**அம்பை, காட்டில் ஒரு மான்**, **பக்**.147-154)

**சுற்றுலாப் பயணம்**

கடலையொட்டி ஓடும் ஒரு நல்ல பாதை சென்னையிலிருந்து பாண்டிச்சேரி வரை போடப்பட்டுள்ளது என்று கேட்டதுமே பாண்டிச்சேரி போகும் ஆசை வந்துவிட்ட இரண்டு

தோழிகளின் சுற்றுலாப் பயணத்தை "**பயணம்** - 5" என்ற சிறுகதை விவரிக்கின்றது. பாண்டிச்சேரி என்னவோ தூரதேசம் போலவும் அங்கு போனவுடன் சிறகுகளைப் பூட்டிக் கொண்டு பறக்கலாம் என்பது போலவும் ஒரு பிரமை அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. காலையில் இலக்கியக் கூட்டம், அதன் பிறகு ஊர் சுற்றல், மாலையில் கடல், அதன் பின், என பாண்டிச்சேரி போய் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றித் திட்டங்களை வகுத்து விட்டனர். திட்டஅளவில் பாண்டிச்சேரி பயணம் பிரமாதமாக அமைந்துவிட்டது. பாண்டிச்சேரி செல்ல ஏற்பாடு செய்த வாடகை வண்டியில் செல்லும் போது கைப் பையில் எடுத்துச் சென்றிருந்த தெள்ளுத் தமிழ்ப் பாடல்களை போட செய்து பாட்டுடன், இவர்களும் ஆனந்தமாய்ப் பயணம் செய்துள்ளனர். பிறகு பாண்டிச்சேரியின் ஒரு பயணிகள் விடுதியில் தங்கி இலக்கியக் கூட்டம், ஊரைச் சுற்றிப் பார்த்தல், மாலையில் கடலுக்குச் செல்லுதல் என தங்கள் சுற்றுலாப் பயணத்தை இனிமையாகக் கழித்துள்ளதைக் கதை மூலம் அறிய முடிகிறது. (**அம்பை**, **வற்றும் ஏரியின் மீன்கள்**, **பக்**-50-57)

**முடிவுரை**

அம்பையின் சிறுகதைகளில் பயணங்கள் மனிதர்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பதாகவும், புத்துணர்வு ஊட்டுவதாகவும் அமைந்துள்ளன. பேருந்து பயணம் இனிமையானதாக அமைய உடன் பயணிப்பவர்களுக்கும் பெரும் பங்கு உள்ளதையும் ஒரு பெண்ணின் வெளியூர் பயணத்திற்கு ஒரு ஆண் துணையாகச் சென்று, அவள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதையும், பயணம் மேற்கொள்ளும் ஊர்களில் தெரிந்தவர்கள் அல்லது உறவினர்கள் இருப்பது அந்தப் பயணத்தை மறக்க முடியாத அனுபவமாக மாற்றும் என்பதையும் கதைகள் நமக்கு உணர்த்துகின்றன. மேலும் ஆன்மீகப் பயணத்தில் கடவுளை தரிசிக்கும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் தின்பண்டங்கள் உண்பது, பிற பொழுதுபோக்குகள் எனப் பயணம் செய்யும் போது பாடல்கள் கேட்பதும், பிறகு ஊர்சுற்றிப் பார்ப்பதுமாய் சுற்றுலாப் பயணம் அமைந்துள்ளதையும் கதைகள் மூலம் அறிய முடிகின்றன.

**பார்வை நூல்கள்**

1. அம்பை(1999), காட்டில் ஒரு மான், காலச்சுவடு பதிப்பகம், சென்னை.
2. அம்பை(2011), வற்றும் ஏரியின் மீன்கள், காலச்சுவடு பதிப்பகம், சென்னை.
3. ஞானபுஷ்பம், இரா. (1990), தமிழில் பயண இலக்கியம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

## References

1. Ambai (1999), Kaatil Oru Maan, Kaalasuvadu Pathippagam, Chennai.

1. Ambai (1999), Vatrum Yeriyil Meengal, , Kaalchuvadu Pathippagam, Chennai
2. Gnanapushpam, R.(1990), Tamilil Payana Ilakkiyam, Ainthinai Pathippagam, Chennai.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**சந்தியா. வெ. " அம்பை சிறுகதைகளில் பயணப் பதிவுகள் "** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 4, இதழ் 1, சனவரி 2024, பக். 43-48

**Cite this Article in English**

**Sandhiya V " Travel Documentation in the Short Stories of Ambai"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.4 Issue 1, January 2024, pp. 43-48